1991 சனவரி 23]

மேலும் மிக விரைவில், அது கழகத் தலைவராலே அறிவிக்கப் பட்ட திட்டம் என்ற காரணத்தாலே, அவசியம் ஆவன செய்ய இயலுமா என்பதை மீண்டும் ஒருமுறை கேட்க விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. மு. கண்ணப்பன் : தலைவர் அவர்களே, இது ஏதோ சென்னை நகரத்திலே மட்டும் இருக்கக்கூடிய பிரச்சினை அல்ல. மாநிலம் முழுவதும் இருக்கக்கூடிய ஒரு பிரச்சினை. இதிலே அரசுக்கு எவ்வளவு கூடுதலான செலவாகும் என்பதையெல்லாம் ஆராய்ந்து பார்த்துதான் முடிவு எடுக்க வேண்டும்.

திரு. அ. கணேசமூர்த்தி : பேரவைத் தலைவர் அவர்களே, போக்குவரத்துத் துறையால் நடத்தப்படுகிற பொறியியல் கல்லூரி, அதுபோல மருத்துவக் கல்லூரி ஆகியவற்றிலே பணி புரிகிற தொழிலாளர்களுக்கும் இந்த இலவசப் பயணம் செய்வதற்கு அனுமதியை அரசு வழங்குமா என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. மு. கண்ணப்பன் : தலைவர் அவர்களே, தற்போது ஏராளமான கட்டத்தில் அது நடந்து கொண்டிருக்கிறது. எல்லாமே இலவசம் என்று சொன்னால் எப்படி பேருந்துக் கழகங்களை நடத்த முடியும் என்பது உறுப்பினர்களுக்குத் தெரியாத ஒன்று அல்ல.

அய்யனார் கோவில் அருவியை சுற்றுலா இடமாக மாற்றுதல்.

* 3369—**திரு. வி. பி. இராசன் :**

மாண்புமிகு இந்துசமய அறநிலையத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா;

இராசபாளையத்திற்கு மேற்கே மேற்கு தொடர்ச்சி மலையில் உள்ள அய்யனார் கோவில் அருவியை சுற்றுலா இடமாக மாற்ற அரசு முயற்சி மேற்கொள்ளுமா ?

மாண்புமிகு திரு. கே. பி. கந்தசாமி : தலைவர் அவர்களே, காமராசர் மாவட்டத்தில் இராசபாளையத்திற்கு மேற்கே மேற்கு தொடர்ச்சி மலைக்கு அருகில் உள்ள அய்யனார் கோவில் அருவியை சுற்றுலா இடமாக அறிவிக்கும் செயற்குறிப்பு தற்போது அரசிடம் இல்லை.

திரு. வி. பி. இராசன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இராசபாளையத்துக்கு மேற்கே, மேற்கு தொடர்ச்சி மலையில் உள்ள அய்யனார் கோவில் அருவிக்கு தினமும் சுற்றுலாவுக்கு வருகின்றவர்களும், உல்லாசப் பயணிகளும் சேர்ந்து ஆயிரக்கணக்கானோர் அருவியிலே குளித்துவிட்டு

வருகிறார்கள். அந்த அருவிப் பகுதியை சுற்றுலா மையமாக ஆக்கினால் அரசுக்கு வருவாய் கிடைக்கும்; காமராசர் மாவட்டத்தில் சுற்றுலா மையங்கள் இல்லவே இல்லை. ஆகவே அதை மனதில்கொண்டு காமராசர் மாவட்டத்தில் இராசபாளையத்திலே மேற்கு தொடர்ச்சி மலையில் அய்யனார் கோவில் பகுதியைச் சுற்றுலா மையம் ஆக்க வேண்டும் என்று நான் கேட்டுக்கொள்கிறேன். ஒருவேளை சுற்றுலா மையம் ஆக்க வசதி இல்லை என்று அறிவித்தாலும் கூட, சுற்றுலா விடுதியாவது அங்கு கட்ட வேண்டும். திரைப்படத் துறையினர் படம் எடுக்க அங்கு வருகிறார்கள்; படம் எடுக்க வருகின்றவர்கள் தங்குவதற்குப் போதுமான வசதி இல்லை என்று குறைபட்டுக்கொண்டு இருக்கிறார்கள். ஆகவே சுற்றுலா விடுதியாவது அங்கு கட்டுவதற்கு அரசு ஏற்பாடு செய்யுமா என நான் அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கே. பி. கந்தசாமி: தலைவர் அவர்களே, ஒவ்வொரு மாவட்டத்துக்கும் இரண்டு இடங்களைத் தெரிந்து எடுத்து சுற்றுலாத் தலமாக 'டிஸ்ட்ரிக்ட் எக்ஸ்கர்ஷன் சென்ட்டர்' அரசு அறிவித்து இருக்கிறது. ஏற்கனவே காமராசர் மாவட்டத்துக்கு பிளவைக்கல் அணை, பில்லலூர் அணை ஆகிய இரண்டு இடங்களைத் தேர்வு செய்து சுற்றுலாத் தலங்களாக அமைக்கப்பட்டு இருக்கின்றன. அதுபோல மற்ற மாவட்டங்களிலும் இப்படிப்பட்ட இடங்களுக்கு வருகின்ற பயணிகளுக்கு அங்கே அடிப்படை வசதிகளைச் செய்து தந்த பிறகு ஒவ்வொரு மாவட்டத்திலேயும் மூன்றாவது இடத்தையும் தெரிந்து எடுக்கலாம் அப்போது மாண்புமிகு உறுப்பினருடைய கருத்து பரிசீலனைக்கு எடுத்துக்கொள்ளப்படும் என்று நான் தெரிவித்துக்கொள்கிறேன்.

கோவில் நிலங்களை பொதுக் காரியங்களுக்கு வழங்குதல்.

* 9262—திரு. அன்பில் பொய்யாமொழி:

மாண்புமிகு இந்துசமய அறநிலையத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா;

(அ) தமிழகத்திலுள்ள கோவிலுக்குச் சொந்தமான நிலங்களைப் பள்ளிகள் கட்டுதல் போன்ற பொதுக்காரியங்களுக்கு வழங்கும் திட்டம் அரசிடம் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், விவரம் என்ன?

மாண்புமிகு திரு. கே. பி. கந்தசாமி: தலைவர் அவர்களே, (அ) மற்றும் (ஆ); எந்தவித வருவாயும் தராத கோவில் நிலங்களை, அவசியம் ஏற்படின், விற்பனை செய்யலாம் என்ற முடிவினை அரசு சமீபத்திலே எடுத்துள்ளது.